
# பயில்நிலம்

மாத இதழ்



புதிய பகுதி ஆரம்பம்

சீனாவின் சின்னக் கதைகள்

தேசத்தை முரண்பட வைத்ததே ஊடகங்கள்தான் என்று நான் சந்தேகிக்கிறேன்.

மார்ச் ௨005

ரூபா ௨0.00

## தேசிய கலை இலக்கியப் பேரவையின்
# புத்தகப் பண்பாட்டுப் பயணம் - 2005

தேசிய கலை இலக்கியப் பேரவை அதன் புத்தகப் பண்பாட்டுப் பயணத்தின் அடுத்த மைல்கல்லை அடையும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அதன் பொருட்டு எதிர்வரும் **19.08.2005**

**வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு**

**கொழும்பு - 06, வெள்ளவத்தையில்** அமைந்துள்ள

**கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் புத்தக விழா**

ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இந்நிகழ்வில் பின்வரும் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

## ரூபா 50,000/- வாசகர் பணப்பரிசு வெல்லும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் 50,000/- ரூபாவை வெல்ல, தேசிய கலை இலக்கியப் பேரவையால் விநியோகிக்கப்பட்டுள்ள நூற்பட்டியலில் இருந்து 1000/- ரூபா பெறுமதியான நூல்களை முன்கூட்டியே கொள்வனவு செய்யவேண்டும். அவ்விதம் கொள்வனவு செய்பவர்களுக்கு கொள்வனவு சிட்டை வழங்கப்படும். இக்கொள்வனவு சிட்டையின் அடிக்கட்டைகள் குலுக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 50,000/- பணப்பரிசாக அன்றைய தினம் அதே அரங்கில் வழங்கப்படும்.

## ரூபா 10,000/- இலக்கிய ஆர்வலர் பணப்பரிசு வெல்லும் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கலை, இலக்கியம் மற்றும் தேசிய கலை இலக்கியப் பேரவை தொடர்பான 25 கேள்விகள் கேட்கப்பட்டு புள்ளிகள் இடப்படும், 10 கேள்விகளுக்கு மேல் சரியான விடையளித்து அதில் கூடிய புள்ளிகள் பெறுபவருக்கு ரூபா 10,000/- பணப்பரிசு வழங்கப்படும்.

**புத்தகப்பண்பாட்டை மேம்படுத்துவோம்,**
**அரங்கப்பண்பாட்டை வளப்படுத்துவோம்.**
**அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**
**அனைவரும் வருக, பரிசுகள் வெல்க.**

**தேசியகலை இலக்கியப் பேரவை**

இல. 44, கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, கொழும்பு -11.
தொ.பே.இல. 2381603, தொலைநகல். 2473757.

**மாற்றங்களை வேண்டி.....**

# பயில்நிலம்

ஏடு இரு

மார்ச் 2005

**இதழாசிரியர்:**
ந. பிரசாந்த்

**விநியோகம்:**
தே. ஜனமகன்

**விளம்பரம்:**
பொ.கோபிநாத்

**பயில்நிலம் குழு:**
தெ. ஞா மீநிலங்கோ
கு. பாரதி
தே. அபிலாஷா
வி. பிரபுநாதன்
ஸைரா கலீல்
கி. திவாகரன்
க. அபிராமி
செ. நந்தமோகன்
செ. கௌரி
ந. ரவிச்சந்திரகுமார்
த. பார்த்திபன்

**வெளியீடுவோர்:**
பயில்நிலம்
59/3, வைத்யா வீதி,
தெஹிவளை
தொ.பே. 5527074


**பக்க வடிவமைப்பு:**
Mapco
104, சங்கமித்த மாவத்தை,
கொழும்பு - 13. தொ - 2330480

**அச்சுபதிப்பு:**
விகடன் பிரின்ரஸ்
கொழும்பு - 06
தொ.பே. 2361329


## இதழில்........

### சிறுகதை


| | பக்கம் |
|---|---|
| கு. வாசுகி | 03 |
| ஜெ. சாவகன் | 14 |
| பகலவன் | 20 |

### கவிதை


| | |
|---|---|
| சி. கௌரி | 05 |
| அனலையூர் சேந்தன் | 06 |
| பவித்ரா | 10 |
| வெதமுல்லையூர் கந்தையா கணேசமூர்த்தி | 12 |
| எஸ். ஷாமினி | 13 |
| சி. ஷேர்மிளா | 18 |
| இ. சுபாரா | 19 |
| ஆஷிகா | 23 |
| வானதி | 29 |
| மீநிலா | 29 |
| மீரா | 30 |
| கு. பாரதி | 35 |




### கட்டுரை


| | |
|---|---|
| அ. செஞ்ஞாயிறு | 07 |
| க. அபிராமி | 11 |
| பொ. கோபிநாத் | 21 |




### நேர்காணல்




இளையதம்பி தயானந்தாவுடன் 24



**வசந்தம் புத்தகசாலை**
(South Asian Book Shop)
மீண்டும் திறக்கப்பட்டுள்ளது
ஈழத்து எழுத்தாளர்களின்
படைப்புகளைப் பெற்றுக்கொள்ள

வசந்தம் புத்தகசாலை
இல. 44, கொழும்பு மத்திய சந்தைத் தொகுதி, கொழும்பு -11.
தொ:2381603. தொலைநகல்:2473757

பயில்நிலம் | மாற்றங்களை வேண்டி
மார்ச் 2005
விதைப்பு - 01
அறுவடை - 07

# நீண்ட தொலைவு வந்துவிட்டோம்

இன்றைய சமூக தளத்தில் யதார்த்தங்கள் முதலாளித்துவத்தின் பணப் போர்வையால் மூடப்பட்டு இருக்கின்றன. சமூக விடுதலை என்பது இன, மத, பால், சாதியம், மொழி என்று எல்லா நிலைகளிலும் அவசியமாகி நிற்கிறது. இவற்றில் பால் ரீதியான ஒருமைப்பாட்டின் தேவை அனைவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. பொருளாதார பண்பாட்டுத் துறையில் பெண்களுக்கான உரிமைகள் அடையாளங் காட்டப்படாது அடக்கு முறையாளர்களால் மறைத்தே வைக்கப்பட்டிருக்கிறது. அது தவிரவும் பெண்களுக்கான உரிமை என்பது கொடுக்கப்படல் வேண்டும் என்பதில் எமக்கும் உடன்பாடு இல்லை. காரணம் அது கொடுக்கல் வாங்கல் செய்வதற்கு நுகர்பொருள் கிடையாது.

குடும்பத்திற்குள்ளேயே பெண்களை அடக்கியாள்வதுதான் பல்லாயிரம் ஆண்டுகளாக நிலவிவரும் சமூக ஆதிக்க முறை. இந்த அடக்குமுறைக்கு தீர்வு காணுவதன் மூலம் தான் மற்றைய ஆதிக்க முறைக்கு முடிவு கட்டலாம்.


வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் சொந்த, சமூக, உடலியல், அறிவியல் அனைத்திலும் ஆணுக்குச் சரிநிகராகப் பெண்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்புப் பெறுவதன் மூலம், மிகப்பெருமளவு படைப்பாற்றலும், ஆக்குமுறை ஆற்றல்களும் வெளிப்படும். புதுமையான பங்கேற்புக்கு ஊக்கம் உண்டாகும். அதே சமயம் ஆண்களின் மனப்போக்குகளும் மாறுதலடையும்.

இனி மேலே படிக்க இதழ் உங்கள் கைகளில்.......

*- ஆசிரியர் குழு -*

**கவனிக்கவும்:**
பயில்நிலம் புதிய எழுத்தாளர்களை இனங்காணவும், புதிய படைப்பாளிகளை ஊக்குவிக்கும் முகமாகவுமே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# கடலும் கனவும்



கு. வாசுகி

அந்த வைத்தியசாலைக்கு நேசமலரைக் கொண்டு வந்த போது அவளுக்கு நினைவு திரும்பியிருக்க வில்லை.

தலையில் போடப்பட்டிருந்த கட்டு முழுவதுமாய் இரத்தம் தோய்ந்து போயிருந்தது.

உடம்பும் மனசும் அனுபவித்துக் கொண்டிருந்த வேதனை முகத்திற் தெரிந்தது.

அவளை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்திருந்தார்கள்.

வெளியே போடப்பட்டிருந்த வாங்கில் அமர்ந்திருந்த ஒரு இளம் பெண் வேதனை பொங்கும் குரலில் நிகழ்ந்ததை யாருக்கோ விபரித்துக் கொண்டு இருந்தார். ''இருந்தாப்போல நினைச்சுக் கொண்டு குளறி குளறி அழுவா. பிள்ளையளைப் பற்றிச் சொல்லிச் சொல்லி புலம்புவா.

இப்ப இரண்டு நாளா ஒரு சத்தமும் இல்ல. ஒரு மூலையில இருந்து யோசிச்சுக் கொண்டு இருந்தவ. இருந்தாப்போல எழும்பிப் போய் சுவரில மண்டைய மடார் மடார் எண்டு மோதத் தொடங்கிட்டா. எங்களால மறிக்கேலாமல் போட்டுது. கடைசியில ரெண்டு மூண்டு ஆம்பிளையளாப் பிடிச்சுத்தான் ஆள நிப்பாட்டினவை. அதோட அவ மயங்கிப் போனா".

''அது சரி பிள்ளை, மூண்டு பிள்ளையளையும் புருசனையும கடல் திண்ட கொடுமையை கண்ணால கண்டவளுக்கு மனம் என்ன பாடுபடும்?"

''மிஞ்சியிருக்கிற ரெண்டு பிள்ளையளுக்கும் உறவெண்டு சொல்ல வேற ஆரும் இல்லை. அதுகளுக்காகவெண்டாலும் உயிரோட இருக்கத்தானே வேணும்."

உழைப்பும் கலகலப்பும் அன்பும் மகிழ்ச்சியுமாய் தழைத்துப் பொலிந்திருந்த வீடு அது. கபிரியேல் சம்மாட்டி யாரிடம் வேலை செய்த றொபின்சன், விசுவாசம் மிகுந்த ஒரு நல்ல கடற்றொழிலாளி.

சலியாத உழைப்பும் பாட்டுக்கு ஏற்ற வருமானமுமாய் வாழ்வு சிறந்தது றொபின்சனுக்கு. இருபதாவது வயதிலேயே பதினெட்டு வயதான நேசமலரைத் திருமணம் செய்து கொண்டான். ஒன்றுக்குள் ஒன்றாய்

உறவுக்குள் நிகழ்ந்த சம்பந்தம். எதுவித சிக்கலு மில்லாமல் நிறைவேறியது றொபின்சன் - மலர் காதல் திருமணம்.

இருபத்தாறு வயதுக் குள்ளேயே ஐந்து பிள்ளைகளின் தாயானாள் நேசமலர். அவளது இறுக்கமான நடைமுறைகளால் நகைகள், பொருட்கள் என தேடிக் கொள்ள முடிந்தது. வீட்டை விரும்பினமாதிரி அழகாக மாற்ற முடிந்தது.

பிள்ளைகள் முதல் மூவருமே படிக்கத் தொடங்கி யிருந்தார்கள். நல்ல பாடசாலைகளில் சேர்க்க முடிந்தது. பெரிய இடத்துப் பிள்ளைகள் போல சப்பாத்தும் கால்மேசும் அணிந்து "டை" கட்டிப்போகும் பிள்ளைகள் இவர்களின் பெருமிதத்தின் மையமானார்கள்.

"எங்கட பிள்ளைகள் எங்களைப் போல கடலில் கிடந்து மாயாமல் படிச்சு நல்ல இடத்துக்கு வரவேணும்"

மலரின் மனக்கனவுகள் றொபின்சனின் இதயத்தில் கோட்டைகளாய் உயரும். எதிர்காலம் ரம்யமான ஒரு கனவாய் இதயத்துள் விரிந்து மயக்கிற்று.

"இந்த முறை நத்தாருக்கும் பிள்ளையள் விரும்பிற மாதிரி ரவுணில கிறிஸ்மஸ் ட்றீ, கலர் பல்பு எல்லாம் வாங்கிறது" றொபின்சன் கூறிய போது "சும்மா காசுகளை வீணாக் காமல் பிரியோசனமாய் யோசியுங்கோ" என்று தடுத்தாள் மலர். "பிள்ளை யளின்ர சந்தோஷத்திற்கு உதவாத காச வச்சு என்னத்துக்கு" என்று கேட்டு எழுந்து போன றொபின்சன் பின்னேரம் வீடு திரும்பிய போது சொன்ன பொருட்களோடு தான் வந்தான்.

ஒரு நாளும் இல்லாத அழகாய் வீடு அலங்கரிக்கப் பட்டது. "ராசா வீட்டு குழந்தைகள்" மாதிரி குழந்தைகள் அழகாய் ஒளிர்ந்தார்கள்.

இந்த முறை கிறிஸ்மஸ் ஒரு காலமும் இல்லாத விதமாய்த்தான் இருந்தது. அயலும் உறவும் வந்து கூடிய போது சந்தோஷம் மிளிர்ந்தது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலையிலும் முதல்நாள் மகிழ்ச்சியின் ஈரலிப்பு தெரிந்தது. "சோம்பிக் கொண்டு கிடவாமல் எழும்புங்கோவன். பெரிய கோவிலிற்கு ஒருக்கா போட்டு வருவம்" மலரின் கோரிக் கையைக் காதில் வாங்காமல் அவ்வளவு துாரம் எங்களால நடக்க ஏலாதம்மா" என மறுத்த முதல் மூணடு பிள்ளைகளும் அப்பாவை ஒட்டிக்கொண்டு கிடக்க கடைக் குட்டிகளோடு புறப்பட்டாள் நேசமலர்.

அவளது தெருவிலிருந்த வேறு பெண்களுடன் சேர்ந்து கலகலப்பாய் போனார்கள் எல்லோரும் வழிபாடு முடிந்து தெருவுக்கு இறங்கிச் சிறுதூரம் வந்த பிறகுதான் அலறி அடித்துக் கொண்டு ஓடிவந்த சனத்தை கண்டார்கள். அவர்கள்.



"ஐயோ! கடல் பெருக் கெடுத்து குடிமனைக் குள்ள எல்லாம் புகுந்திட்டுது" அந்தப் பக்கம் போகாதையுங்கோ...." அந்தப் பக்கத்தில்தானே அவளது குழந்தைகள்...

அவளது ''ராசா''....

அவளது வாழ்வு ...........

ஐயோ! ..... என்ன என்ன ஆயிற்று இன்றைக்கு?

அள்ளுப்பட்ட சனத்தோடு தெய்வாதீனமாய் பிழைத்த வளுக்கு இதயம் நொருங்கி கிடந்தது.

மதியமாகி நடுப்பகலில் தான் அந்தப்பக்கம் போக முடிந்தது. அவர்களின் வீடு அள்ளுண்டு புரண்டுபோய் சிதறியிருந்தது.

வெள்ளமும் கருநிறச் சேறுமாய்ப் பரவியிருந்தது எல்லா இடமும். இடிபாடுகளை அகற்றி எடுத்த உடல்களுக் கிடையில் அவள் அடையாளம் கண்டாள்.


அவளது றொபின்சனை. சாம்சனை, றீட்டாவை ஜோன்சனை, கதறிக்கதறி என்ன செய்வதென்று அறியாமல் புலம்பி... எல்லோருக்குமாய் நிகழ்ந்த அந்தச் சம்பவத்தின் கோர ஞாபகங்களுடன் அயலூரில் உறவினர் வீடொன்றில் தஞ்சமானார்கள் நேசமலரும் இரண்டு பிள்ளைகளும்.

அவசர சிகிச்சைப் பிரிவிலிருந்து நேசமலரை சாதாரண வார்ட்டுக்கு மாற்றியிருந்தனர்.

அவளது கட்டிலின் அருகே திகைப்பும் குழப்பமுமாய் அவளது இரண்டு குழந்தைகளும நின்றிருந் தார்கள். நினைவு திரும்பிய நேசமலரின் கண்ணில் ஜேம்ஸ்தான் முதலில் பட்டான்.

கையை நீட்டி அவனது தலையைத் தடவினாள் நேசமலர். ''இந்தக் குழந்தையளுக்காக நீ எப்பிடியும் இருக்க வேணும் மலர். அதுகள அநாதையாக்கிப போடாத'' ஆரோக்கியம் மாமியின் குரல் கிணற்றுக்குள் இருந்து ஒலிப்பது போல கேட்டது அவளுக்கு. —●—

# முட்கம்பி



அவள் நேசிப்பதனாலேயே
அவனை வெறுக்கிறாள்.
சமுதாயம் என்னும்
முட்கம்பியால்
அவள் சுற்றப்பட்டு
விதவை என்னும்
பட்டம் வழங்கப்பட்டவள்
தன் அன்பு அவன்
மனதில் காயங்கள்
ஏற்படுத்தினால்
காயத்தை மாற்ற
அவளால் மருந்து
போட முடியாது
அவள் சமுதாயம்
என்னும் முட்கம்பியினால்
சுற்றப்பட்ட விதவை.

– சி. கௌரி –

# கடலுலக நண்பர்கட்கு கால்நடையின் கடிதம்!

(சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கடலுணவுப் பாவனை மிகவும் குறைந்து இறைச்சிக்கான விலங்குகளின் கற்பனைக் கலக்கம்!)

ஆர்ப்பரிக்கும் ஆழியுங்கள் இல்லமானது - அதில்
ஆடுகின்ற அலைகள் கூட ஊஞ்சலானது!
நீர்ப்பரப்பின் மென்றுமென்று அகழும் சோதரா - நீர்
நிலைகுலைத்த காரணத்தை நீயும் கூறடா!

மீண்டுமந்த ஆழியிங்கு பீறிப்பாயுமோ - மண்ணில்
மீதமுள்ள பகுதிகளும் நீருள் சாயுமோ?
மாண்டுபோன உடல்களுங்கள் உணவுஆனதாம் - அதனால்
மனிதரிற்கு உம்மையுண்வதும் மனது போனதாம்!

விதவிதமாய் அன்றுபல கறிகளாகினீர் - உடல்
வெட்டிவேக வைத்துநல்ல பொரியலாகினீர்!
இதம்பதமாய் நீங்களன்று இரைகளானதால் - வாரம்
இருதினங்க ளோடுமெங்கள் இழப்புநின்றது!

அருவெறுத்து இன்று உம்மை அவர் மறந்ததால் - அட
அனுதினமும் எங்கள் மேலே கத்திபாயுது!
கருவறுந்து கவலையோடு குழம்புமாகினோம் - எதிர்
காலமதை எண்ணிமனம் குழம்பலாகி னோம்!

குட்டிகுஞ்சு யாவுமிங்கு கொலைகளாகுது - எங்கள்
குலமழிந்து போவதுபோல் குலைநடுங்குது!
சட்டிபானை சூடுணர்த்த மச்சநண்பனே - நீ
சத்தியமாய் தப்பியுள்ளாய் எங்களன்பனே!

நரத்தசையை நீங்களுண்ண மார்க்கமில்லையே - இதை
நம்புகின்ற நிலையிலெங்கள் மக்களில்லையே!
விரல்களோடு நகைகளுங்கள் வயிற்றிலென்கிறார் - இந்த
விந்தைகளால் எம்கழுத்தை கயிற்றில் போடுறார்!

எத்தனைநாள் செல்லுமிந்த இழிவுமாறவே - சுனாமி
எங்களிற்கேன் இப்படியோர் இழப்பு ஆனதோ?
மெத்த அலை மெத்தைமீது துள்ளும் நண்பனே - மனிதன்
மீண்டுமுன்னைப் புசிக்கமுன்னர் கொள்ளுமின்பமே!

- அனலையூர் சேந்தன் -

கவிதை



# சுடுகாடு நோக்கிய பயணம் .....

**தாங்களின் உதவி பெற்ற நாடுகளையும் உதவி பெறக்கூடிய நாடுகளையும் சர்வதேச நிதி அமைப்பு பொருளாதார ரீதியாக அழித்து விடுகிறது. அரசியல் ரீதியாக சிர்குலைக்கின்றது. எனவே சர்வதேச நிதி அமைப்பில் இத்தகைய நிதி உதவி என்பது பிசாசின் முத்தம் என்று சொல்வதே சரியாக இருக்கும்.**

**- ஃபிடல் காஸ்ரோ -**

பிரேசில் நாட்டின் போர்ட்டோ அலிகிரோவின் அருகாமையில் உள்ள காய்பி ஆற்றங்கரையை ஒட்டிய பகுதியில் பாழடைந்த நிலையில் உள்ள குடிசை. அங்கு வந்த சமூக சேவகியை 5 குழந்தைகள் வரவேற்றன. வழமை போல பெற்றோர்கள் குப்டை மேடுகளை நாடிப் போயிருந்தனர். குழந்தைகளின் நிலை கண்ட சமூக சேவகி, ''நீங்கள் எல்லோரும் சாப்பிட்டீர்களா?'' என்று வினவினார். ''ஆம், நேற்று அம்மா, பழைய செய்தித் தாள்களிலிருந்து கேக் செய்து தந்தார்.'' என்று குழந்தைகள் பதிலளித்தன. திடுக்கிட்டபடி ''என்ன? கேக்கா?'' என அவர் வினவ ''ஆம் கேக்தான் அம்மா பழைய பத்திரிகைக் காகிதங்களை சேர்த்து ஒன்றாக்கி பந்தாகச் செய்து நீரில் நனைப்பார். அது நீரில் நனைந்து நன்றாக மிருதுவானவுடன் அதைப் பிசைந்த உருட்டி சிறு சிறு கேக்குகளாகச் செய்வார். நாங்கள் அவற்றைச் சாப்பிட்டுவிட்டு தண்ணீர் குடிப்போம் கேக் நன்றாக இருக்கும் வயிறும் நிறைந்துவிடும் பசிக்காது'' என்றன அக்குழந்தைகள். இது 1980களின் தொடக்க காலப்பகுதியில் நிகழ்ந்த ஒரு உண்மைச் சம்பவம் இக்கொடுமையை ஆக்கிய புண்ணியவான்கள் யார்?

பிரேசில் மிக நீண்ட காலமாக மக்கள் தேவைக்கு அதிகமான உணவை உற்பத்தி செய்து வந்தது. இதைக் கவனித்து வந்த சர்வதேச நிதிநிறுவனம் (IMF) உற்பத்தியை அதிகரிக்க கடன்களை வழங்கியது. இதனால் உற்பத்தி பன்மடங்கு பெருகியது உணவுப் பொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. முன்னர் மேலதிகமானதை நல்ல விலைக்கு ஏற்றுமதி செய்து வந்த பிரேசில் உற்பத்திப் பெருக்கம் காரணமாக மேலைநாடுகளுக்கு மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தது. இதனால் மேலைநாடுகள் மிகக் குறைந்த விலையில் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொண்டன. விலை வீழ்ச்சி காரணமாக விவசாயிகள் பெரும் சிக்கலுக்கு உள்ளாகினர். ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட தொகை பெற்ற

கடனின் அரைவாசியை விடக்குறைவாக இருந்தது. இக்கட்டத்தில் சர்வதேச நிதி நிறுவனம் "புனர் நிர் மாண சீரமைப்புத்திட்டம்" என்ற பெயரில் கடனுதவி செய்தது. ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்ய வலியுறுத்தியது. அரசும் ஏற்றுமதிப் பொருட்களுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியது. இதில் இறங்கிய விவசாயிகளுக்கு நல்ல கடனும் கிடைத்தது. இதன் விளைவால் தங்களின் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதைவிடுத்து ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யும் பணியில் விவசாயிகள் குதித்தனர்.

சோயாபீன்ஸ், ஆரஞ்சுப்பழரசம், கோழி இறைச்சி, சோளம் போன்றன ஏற்றுமதி செய்யப்பட்டன. வேளாண்மை ஏற்றுமதி வருவாயில் அமெரிக்காவிற்கு அடுத்தபடியான இடத்தை பிரேசில் பிடித்துக் கொண்டது. 1970 களில் சோயாபீன்ஸ் பயிரிட்ட நிலங்களின் பரப்பு 9 மடங்கு அதிகரித்தது. இவ்வாறான அதிக உற்பத்தியால் சர்வதேச சந்தையில் விலை குறையத் தொடங்கியது. பிரேசில் மக்களின் அன்றாட உணவுப் பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்தது. அன்றாட உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்பட கோதுமையை இறக்குமதி செய்வதற்கான நுகர்வு மானியத்தை சர்வதேச நிதி நிறுவனம் வழங்கி இறக்குமதியை வரவேற்றதுடன் ஏற்றுமதிப் பொருட்களின் உற்பத்தி தொடர்வதை நிலைநிறுத்தியது.

இவ்வாறான நிலையில் 1978,79 இல பாதகமான தட்பவெட்ப நிலை இருக்கிற நிலையை வெகுவாகப் பாதித்தது. ஏற்றுமதிப் பயிர்கள் நாசமடைந்தன. சோள உற்பத்தியில் 13 சதவீத சரிவும் சோயாபீன்ஸ் உற்பத்தியில் 11 சதவீத சரிவும் ஏற்பட்டன. இதற்கிடையில் மக்கள் தொகைப் பெருக்கம் வருடத்திற்கு 2.5 வீதமாக அதிகரித்தது.

இந்நிலையில் சர்வதேச நிதி நிறுவனம் கோதுமைக்கு வழங்கியிருந்த நுகர்வு மானியத்தை நிறுத்தியது. கடன்களைக் குறைத்தது. "மானியம் பணவீக்கத்தை அதிகரிக்கின்றது" என வாதம் செய்தது.

இக்காலத்தில் எரிபொருளாகப் பயன்படுத்தக் கூடிய கரும்பி லிருந்து பெறப்படும் சாரயத்தை உற்பத்தி செய்யும் உலகின் மிகப் பெரிய தொழிற்சாலையை பிரேசில் அரசு சர்வதேச நிதி நிறுவனத்தின் உதவியுடன் நிறுவியது. "கரும்புப் பைத்தியம்" எல்லோரையும் பிடித்தாட்டியது. இதனால் ஆயிரக்கணக்கான சிறிய விவசாயிகள் நிலங்களிலிருந்து துரத்தப்பட்டனர்.

1980களின் முற்பகுதியில் பிரேசில் சுமார் 500,000 தொன் கோதுமையை அமெரிக்கா விலிருந்து இறக்குமதி செய்தது.

பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்னொரு உபயத்துடன் வந்தது

சர்வதேச நிதி நிறுவனம். அது விதைகள், உரங்கள் என்பவற்றை வழங்கியது. அவையும் ஏற்றுமதிப் பொருட்களுக்கான விதைகளும் உரங்களுமே என்பது இங்கே முக்கியம். சில ஆண்டுகளுக்கு மீண்டும் அமோக விளைச்சல், அனைத்தும் குறைந்த விலையில் ஏற்றுமதி, எனத் தொடர்ந்தது.

சில காலத்தின் பின் வழமை போல பூச்சியினங்கள் தாக்கி பயிர்கள் எல்லாம் அழிந்தன. விளைநிலங்கள் எல்லாம் எதுவுமே பயிர் செய்ய முடியாதளவுக்கு வளமற்ற நிலங்களாக மாறின. பிரேசில் விவசாயிகள், 1986 இறுதியில் வாக்குறுதி செய்யப் பட்டிருந்த நிலச் சீர்திருத்தத்தை எதிர்பார்த்திருந்தார்கள். இறுதியில் நிலச்சீர்திருத்தத்தை அரசு 'கம்யூனிச சதி' என அழைத்தது. நிலச் சீர்திருத்தத்தை வலியுறுத்திய விவசாயிகள், வழக்கறிஞர்கள், பாதிரிமார்கள், தொழிலாளர்கள் என 500க்கும் மேற்பட்டோர் கொலை செய்யப்பட்டனர். இத்துடன் விவசாயிகளின் இறுதி நம்பிக்கையும் தளர்ந்து போனது.

இக்காலப் பரப்பில் நடாத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மொத்த மக்கட் தொகையில் 2/3 பங்கினர் ஊட்டச் சத்து குறைவால் அவதிப்பட்டனர். பிரேசில் வடகிழக்கு பகுதியில் பட்டினி ஒரு புதிய இனத்தையே உருவாகிற்று. அங்கும் அங்குள்ள குழந்தைகளில் 15வீதத்தினர் பிறபகுதி குழந்தைகளை விட உயரம் குறைந்தவர்களாகவும் 20 வீதத்தினர் எடை குறைந்தவர் களாகவும் காணப்பட்டனர்.

இதற்கும் கடன் வாங்கும் போது 4வீதமாக இருந்த வட்டிவீதம் 8வீதமாகி 21வீதமாயிருந்தது. வாங்கப்பட்ட கடன்களின் பெரும்பாலானவை சர்வதேச நிதி நிறுவனம் உள்ளூர் கம்யூனிச எதிர்ப்பை அடக்க வழங்கப்பட்ட இராணுவ தளபாடங்களுக்கானவை. அத்துடன் 40 மில்லியன் டொலர் விழுங்கிய 6 அணுசக்தி நிலையங்கள் இயங்காமல் இருந்தன.

ஆனால் பிரேசில் அரசு 1985 அளவில் வாங்கிய கடனில் இருமடங்கைவிட அதிக தொகையை வட்டியாகக் கட்டியிருந்தது என்பதுவும் உண்மை.

நாங்களும் இன்று சர்வதேச நிதி நிறுவனத்திடம் கையேந்தி நிற்கிறோம். நாளை நமக்கும் இது நடக்கலாம். வரலாற்றுப் பாடங்களை புரிந்து கொள்ளவேண்டிய தேவை நமக்கும் உண்டு அல்லவா?

-அ.செஞ்ஞாயிறு-

### வருந்துகிறோம்

ஜனவரி இதழில் சுனாமி பற்றி புவியியல் கட்டுரையில் இலங்கையை சுனாமி தாக்கிய நேரம் பிழையாக குறிப் பிடப்பட்டிருந்தது. இத்தவறை சுட்டிக் காட்டிய வாசகருக்கு நன்றிகள். தொடர்ந்தும் குறைகளை சுட்டிக்காட்டி எம்மை வழிப்படுத்துங்கள்.

# காண்பாரோ.....? ? ?

- பவித்ரா -
(ஜேர்மனி)



கவிதை

சுந்தரமாய் ஒளிவீசி உலகைச்
சுடர் மயமாய் ஆக்கும் மாந்தர்
சந்திரனின் மண்டலம் காண்பார்
தம்மைத் தாமே காண்பாரோ.....???

செவ்வாயின் நாட்டிற்குச் சென்று
செம்மை நலம் காணும் மாந்தர்
ஓவ்வாதே அலைந்தொழியும் சிந்தை
ஒடுங்க வழி காண்பாரோ.....????


சுக்கிரனின் எல்லைக்குச் சென்று
சுகக் கோளைப் பார்த்திடும் மாந்தர்
வக்கிரம் செய் சீதனப் பேய் வீழ
வழியேதும் காண்பாரோ .... ????

கதிரினையும் அடைந்திடவே நெஞ்சில்
கங்கணமே பூண்டிடும் மாந்தர்
மதி மயங்கா திருந்திடுமோர் உறுதி
மனநிலையைக் காண்பாரோ.....?????

# ஆர்த்ரைடீஸ் தாக்கங்கள் பற்றிய கண்ணோட்டம்

- க. அபிராமி -

நம்மில் பலர் இவரை சந்தித்திருக்கலாம். அவருடன் தம்வாழ்நாளை கழித்துக் கொண்டும் இருக்கலாம் அல்லது அவரைப்பற்றி கேள்விப்படும் சந்தர்ப்பம் உங்களுக்கு இதுவே முதற்தடவையாகவும் இருக்கலாம்... இவர் பால், வயது வேறுபாடின்றி ஓர் அழையா விருந்தாளியாக யாரிடமும் வந்து தங்கக்கூடியவர் ஆனால் பின்னர் இவரை வெளியேற்றுவதென்பது நடைமுறைக்குச் சாத்தியமற்ற தொன்றாகும். இவ்வழையா விருந்தாளி மூட்டுக்களுடன் தொடர்புடைய கொடிய நோயாகிய ''ஆர்த்ரைடீஸ்'' (Arthritis) ஆகும்.



ஆத்ரைடீஸில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் உண்டு.

இந்நோய் உடலின் மூட்டுக்களைக் குறிவைத்தே படையெடுக்கின்றன. இவை தோள், முழங்கை, இடுப்பு, மணிக்கட்டு, கை, முழங்கால், கணுக்கால் மற்றும் பாதம் போன்ற பகுதிகளையே அதிகம் தாக்குகின்றன. அநேக மானோருக்கு இம்முட்டுவலி மற்றும் வீக்கம் போன்றன முதிர்வயதில் தவிர்க்க முடியாத தொன்றாகிவிடுகிறது. இதன் விளைவாகவே 50 வயதைத் தாண்டியவர்கள் ஏதோவொரு வகை ஆத்ரைடீஸிற்கு ஆளாகின்றனர்.

**இந்நோய்க்கான அறிகுறிகளாவன:**

1. மூட்டுக்களில் வலி
2. அவ்விடத்தில் வீக்கம் காணப்படல்
3. வலிகாணப்படும் அம்மூட்டுப் பகுதியை ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் அசைக்க முடியாதிருத்தல்.
4. வீக்கம்/வலி காணப்படும் அப்பகுதியைத் தொடுகையின் மூலம் உணரும் போது உடல் வெப்பநிலையைவிட அதிகமான வெப்பத்தை உணரலாம்.

இவ்வாறான அறிகுறிகள் தொடர்ந்து இருவாரங்களுக்குக் காணப்படின் வைத்தியரை அணுகவேண்டும். ஏனெனில் (இரத்தப் பரிசோதனை) குருதிப் பரிசோதனை மற்றும் X-ray யின் மூலமே ஒருவர் இந்நோய்க்கு ஆளாகியிருப்பதைக் கண்டறிந்து அதற்குகந்த மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளமுடியும். மேற்கூறப்பட்ட ஆத்ரைடீஸ் நோய்க் கான அறிகுறிகள் சடுதியாகவோ அல்லது மெதுமெதுவாகவோ தென்படலாம். இவ்வறிகுறிகளுடன் நித்திரயின்மை, சோர்வு, தசைவலி போன்றனவும் காணப்படும். இவ் ஆத்ரைடீசுக்கு ஆளாகியிருப்பவர்கள்

வீட்டு மற்றும் அலுவலக வேலைகளால் ஈடுபடுவதில் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். கட்டிலிலிருந்து எழுதல், தையல் வேலைகளில் ஈடுபடல், சமைத்தல், நடத்தல், மாடிப்படிகளில் ஏறுதல் மற்றும் கதிரையிலிருந்து எழுந்திருத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் இவர்கள் பலத்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.




Figure 2: Joint with severe osteoarthritis

எனவே இத்தகைய அறிகுறிகள் தென்பட்டவுடன் ஒரு வைத்தியரை நாடினால் மூட்டுக்களை எவ்வாறு பாதுகாத்து பராமரிப்பது மற்றும் இவ்வலிமையை எவ்வாறு குறைப்பது போன்ற அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் மூட்டுக்களுக்கு அதிகவு அழுத்தத்தைக் கொடுப்பதைத் தவிர்ப்பதன் மூலமும் வீட்டுவேலைகளில் ஏனையோரின் உதவிகளைப் பெறுவதன் மூலமும் இவ்வலிமையைக் குறைக்கலாம். அத்துடன் உங்கள் வயது மற்றும் உயரம் என்பவற்றிற்கேற்ப குறிப்பிட்டதோர் உடல்நிறையைப் பேணுவதன் மூலமும் உங்கள் இடுப்பு மற்றும் முழங்கால் பகுதிகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்காதிருப்பதன் மூலமும் இவ்வலியை வெகுவாகத் தவிர்க்கமுடியும்.

தற்போது இவ்வலியைக் குறைப்பதற்காக மாத்திரைகள் மற்றும் பல்வேறு அம்சங்கள் (Exercises) கூட முன்வைக்கப்பட்டுள்ளன. —●—

# நூறாகி நிற்கட்டும்.....!

கவிதை

கண்களை மூடிக்கொள்ளுமுன்
என் ஆயுளின் ரேகைகள்
என் எல்லா நரம்புகளினின்றும்
சுரந்துத் தெறிக்கின்ற
என் கவிதைகளில் படியட்டும்!

கர்த்தரின் பாதைகளில் என்
சென்னி சிறக்கையில்
அனலின் நாக்குகள்
என் விழிமணிகளை நக்கிச் சுவைக்கும்!

மீண்டும் மீண்டும்
மீண்டும் பிறக்கையில்
என் தாகத்தின் பிளவுகள்
எட்டாவது அதிசயத்தை
எட்டி முன்னேறும் !

நான் வாழ்வேனென்ற
மரண அச்சம்
எனக்கில்லையெனினும்
மிச்சமிருக்கிற வாழ்க்கையை
என்னில் யாராவது
வாழ்ந்து முடிக்கட்டும்!

அதுவரையில்
மூன்றில் இரண்டு வேலை
பட்டினியாய்.....
இறைவன், ஆன்மா
இரண்டுக்கும் இடைப்பட்டதாய்
காதலில் அந்தத்தில்
ஆரம்பச் சிதிலமாய்.....

இன்னும் இன்னும்
என் நேர் கோட்டின் வழியே
எல்லாம் வரட்டும்
கண்களை மூடிக் கொள்ளுமுன்!

***வெதமுல்லையூர்***
***கந்தையா கணேஷமூர்த்தி***



கவிதை

# சுனாமி அலை

- சி. ஷாமினி -

வந்ததேயன்று திடீரென்று
என் வீட்டு வாசலினுள்
வலது காலெடுத்து வைத்து
ஒரு தாய் தன் சேயை - கட்டி
அணைத்து தழுவ அவரது
இரு மென் கரங்களை - நீட்டி
நோக்குவது போலவே
பேரிரைச்சலுடனும் ஆரவாரத்துடனும்
கரையோடு மணலைத் தழுவி
ஓடைகளில் இலை குழை தழைகளை
ஓந்தி - பாவமென்னும் பார மூட்டையைச்
சுமந்து கொண்டு அனைத்து
ஜீவராசிகளையும் இடம் பெயர்த்து
உயிர்களைத் திகைக்க வைத்து
எம்மிலங்கையை மட்டுமல்ல பல
நாடுகளை ஒரு நொடியில் ஆட்டிப்படைத்த
மாயஜால வித்தை போல்
தன்னிரு கரங்களான வீறிய
சூழலும் அலைகளை நீட்டி
வந்தாயே டிசெம்பர் இருபத்தியாறாம்
திகதி யன்று - சுனாமியெனும்
கொடிய அரக்கன் உருவில்!
தவப் பொழுதும் சிந்திக்க
வைத்தது எம்மை - சுனாமி அலை!
இதுவுமோர் இயற்கை அன்னையின்
திருவிளையாடல்களுள் ஒன்றேயென்று.



சிறுகதை

# சாப்பாட்டுக் கள்ளன்

– ஜெ. சாவகன் –

நான் சொல்லுறத என்டா உங்களால நம்பமுடியாது. ஆனால் நம்பித்தான் ஆகவேணும். உண்மையில நான் சாப்பிட்டு இப்ப மூணடு நாள் ஆகிட்டுது. வீட்டில ஒரு வேளை அவிக்கிற மரவள்ளி கிழங்க சாப்பிட்டுதான் கொஞ்ச நாளா உயிர் வாழுறம். வெறும் தேத்தண்ணிய சக்கரையோடதான் குடிப்பம். நான் பசிவாற நேரத்துல நல்லா வயிறு முட்ட தண்ணிதான் மண்டுவன். இப்படிதான் ஒருநாள் வெறும் தேத்தண்ணிய மட்டும் குடிச்சிட்டு பள்ளிக்கூடம் போனன். ஆனால் வயித்தில சிறுகுடல் பெருகுடல தின்னுற மாதிரி பசி.

நானும் போய் வெறும் வயித்தில நல்லா பச்சத் தண்ணிய மண்டினன். அது வயித்தக் குமட்டி கொண்டு சத்தி வந்துட்டுது. அப்பிடியே வாய பொத்திக் கொண்டு வெளில ஓடினன். ஆனால் அடக்க முடியாம வகுப்பிலேயே சத்தி எடுத்திட்டன். எங்கட வகுப்பில கூடுதலா பெரிய இடத்து பிள்ளைகள்தான் படிக்கினம். அவையளுக்கு இது எல்லாம் பழக்கம் இல்ல. மூக்கப் பொத்திக் கொண்டு வெளில ஓடிட்டினம். குமரன் எண்ட என்னைப் போல ஒரு ஏழை பெடியன்தான் எனக்கு ஒத்தாசை. அவன்தான் என்னோட சேர்ந்து மண் அள்ளிப் போட்டு துப்பரவு செய்தான். அப்படியே சுத்தம் செய்து முடிக்கவும் பாடசாலை தொடக்க மணி அடிக்கவும் சரியாக இருந்தது. எனக்கோ தலை சுத்துறமாதிரி இருந்திச்சு. நான் அப்பிடியே கொஞ்சம் அசந்து தூங்கீட்டன். குமரனோட மற்ற மாணவர்கள் எல்லாம் உடற்பயிற்சி செய்யிறதுக்கு மைதானத்துக்கு போட்டினம்.

கொஞ்ச நேரத்தில மீண்டும் பசி என்ர வயித்தக் குடைய ஆரம்பிச் சுட்டுது. முன்வரிசைல இருக்கின்ற முரளியின்ர பிட்டும், கத்திரிக்காய், முட்டைப் பொரியல் வாசம் என்ர பசிய மேலும் மேலும் அதிகரிக்க செய்து கொண்டு இருந்தது. எனக்குப் பொறுக்க முடியேல்ல. என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று முரளின்ர சாப்பாட்டை எடுத்து ஒரு பிடி பிடிச்சுட்டன். சும்மா சொல்லக் கூடாது. சாப்பாடு என்றா அதுதான் சாப்பாடு. முரளி அந்த ஊரில தனியார் வைத்தியசாலை வச்சிருக்கிற வைத்தியரோட மகன். ஒரு சின்ன வருத்தத்துக்கு அவரிட்ட காட்ட போறது எண்டாலே முந்நூறு ரூபா கொடுக்க வேணும். ஒரு நாளைக்கு குறஞ்சது பத்து பேர் எண்டாலும் அவரிட்ட போவினம். அப்படி எண்டா அவரோட வீட்டு சாப்பாட்ட என்ன சொல்லவா வேணும்! அந்த சாப்பாட்ட சாப்பிட்டுட்டு அப்பிடியே கம் என்று படுத்துட்டன்.

நான் சாப்பிட்டு முடிக்கவும் உடற்பயிற்சி முடியவும் நேரம் சரியா இருந்துச்சு. இப்ப வகுப்பறைக்கு எல்லா பிள்ளைகளும் வந்திடினம். அவயள் எல்லோரும் உள்ளுக்க வரேக்குள்ள எனக்கு சாப்பிட்டது எல்லாம் ஒருக்கா செமிச்ச மாதிரி இருந்துச்சு. இருந்தாலும் மனசுக்குள்ள ஒரு பலத்த வரவழச்சுக் கொண்டு உயிர் போனாலும் பறவாய் இல்ல இண்டைக்கு மட்டும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்ட வைராக்கியத்தில இருந்தன். முதலாம் பாடத்துக்கு சயன்ஸ் ரீச்சர் தூரத்துல வாறது தெரியுது. அவாவும் அவாவோட மனசு போலவே ஆள் நல்ல பருமன். ஆடி அசைஞ்சு வகுப்ப நோக்கி வந்து கொண்டு இருந்தா. பிள்ளைகள அரவணைக்கிறதுல அவாக்கு நிகர் அவாவேதான்.

ஏழை, பணக்காரன் என்கிறபாகுபாடு எல்லாம் அவா பாக்கிறதே இல்லை. எல்லோரயும் ஒரேமாதிரி அரவணைப்பா. வகுப்புக்கு வந்ததும் எல்லோரும் "குட்மோர்னிங்" சொன்னோம். பதிலுக்கு அவாவும் சொல்லி எங்கள அமரச் சொல்லி பாடம் படிப்பிக்க தொடங்கினா. படிப்பிச்சுக் கொண்டு இருக்கேக்க என்னப்பாத்து உமக்கு ஏதும் சுகம் இல்லையா என்று கேட்டா. உடனே வைத்தியருடைய மகன் முரளி முந்திக் கொண்டு "ரீச்சர் இந்த அகதி பெடியன் வகுப்பில சத்தி எடுத்திட்டான்" என்று சொல்ல, ரீச்சர் உடன "முரளி அப்பிடி எல்லாம் சொல்ல கூடாது நாளைக்கு நாங்களும் அப்படி ஆகலாம். அவருக்கு என்டு அவரின்ர அம்மா அப்பா சங்கர் என்று நல்ல பெயர் வச்சு இருக்கினம் அப்பிடித்தான் கூப்பிட வேணும்" என்று சொன்னா.

"1999ம் ஆண்டு நவம்பர் மாதம் தென்மராட்ச்சில நடந்த இராணுவப் படையெடுப்புல சங்கரின்ர அப்பா இறந்து போனார். அதோட அவேன்ர சொத்துக்களும் அழிஞ்சு போயட்டுது. அம்மாவும் அவரும் அதோட 5 வயது தங்கச்சியும் இப்ப ஒரு சொத்தும் இல்லாம உறவுகளும் இல்லாம இங்க இடம் பெயர்ந்து வந்திருக்கினம்.

அவங்கள நாங்கள்தான் அரவணைக்க வேணும். பாவம் சங்கர். அவர்தான் பாடசாலை முடிய மரவள்ளி கிழங்கு தோட்டத்துக்கு போய் மரவள்ளி கிழங்கு பிடுங்கி கொடுத்து அதுல வாற காச கொண்டுதான் அவேன்ர சீவியம் போய்க் கொண்டு இருக்குது. அவயளும் அவேன்ர ஊரில நல்ல கௌரவமான வாழ்க்கை வாழ்ந்தவர்கள்தான். அவங்கள நாங்கதான் அரவணைக்க வேணும்". என்று சொல்லிக் கொண்டிருக்கவே முதலாம் பாட மணியும் அடிச்சுது. உடன ரீச்சர் என்னை பார்த்து "சுகம் இல்லை என்டா வீட்டில நின்டு இருக்கலாமே" என்றா. பாவம் அவாக்கு எங்க தெரியப் போகுது? எனக்கு சாப்பாடு இல்லாத வருத்தம்தான் இது எண்டு. "பாடசாலை முடிய போய் மருந்து எடும்" என்று சொல்லிட்டு அது வரைக்கும் இந்த பனடோலை போடும் என்று சொல்லி 2 பனடோலை தந்திட்டு அவாவும் வேற வகுப்புக்கு பாடம் எடுக்குறதுக்கு போயிட்டா.

அடுத்தது என்ன நடக்க போகுது எண்டு தெரியாம, ரீச்சரிட்ட மாட்டுப்படாம தப்பிட்டன் எண்டு ஒரு சின்ன நிம்மதி பெருமூச்சு விட்டன். அடுத்தது சமூகக்கல்வி பாடம் சுந்தரி மிஸ். அந்த பாடத்துக்கு அவா வகுப்புக்கு வாரா என்டாலே அந்த சூழலே மயான அமைதியாகிடும். அதுவும் ஏழை பிள்ளைகள் என்றால் அவாவுக்கு கண்ணில காட்டக் கூடாது. அவாவும் வகுப்புக்கு வந்து சேர்ந்திட்டா. ''எல்லோரும் புத்தகங்களை எடுங்கோ வரலாறு படிப்பம். வரலாறு புத்தகம் கொண்டு வராத நாய் எல்லாம் வெளியில போய் முழங்கால்ல நில்லு" எண்டு சொன்னா. அவான்ர பாடம் இல்லை எண்டாலும் கூட நாங்கள் சமூகக்கல்வி வரலாறு புத்தகத்தை கொண்டு போக மறக்கவே மாட்டம்.

உடனே எல்லோரும் புத்தகத்தை எடுக்க, பாரம் இல்லாத முரளின்ட சாப்பாட்டு பெட்டியும் கீழ விழுந்துட்டுது. பார்த்தா அதுக்குள்ள சாப்பாடு இல்லை. உடனே முரளி ''ரீச்சர் யாரோ என்னோட சாப்பாட்டை களவு எடுத்துட்டான்" என்று கத்த ஆரம்பிக்க எனக்கோ உடல் எல்லாம் ஒருக்கா மின்சாரம் பாஞ்ச மாதிரி இருந்திச்சுது. உடனே ரீச்சர் ''எந்த நாய் களவு எடுத்து சாப்பிட்டது. உண்மையைச் சொல்லு. கண்டு பிடிச்சனோ தோலை உரிச்சுடுவன்" என்று கத்தத்தொடங்கினா. எனக்கோ பயத்துல வேர்த்துக் கொட்ட தொடங்கிட்டு திரு திருவெண்டு முழுச ஆரம்பிச்சிட்டன்.

உடனே ''இங்கவா சனியன் நீதானே களவு எடுத்து சாப்பிட்டனி" என்று முதுகல குத்து குத்து எண்டு குத்த ஆரம்பிச்சுட்டா. பிறகு ''இவங்களை இப்படியே விடக் கூடாது" எண்டு "சாப்பாட்டுக் கள்ளன்" எண்டு ஒரு மட்டையில எழுதி, என்ர முதுகுல மாட்டி, பக்கத்துல இருந்த மொனிற்றர் குமரன கூப்பிட்டு, ''இந்தக் கழுதய இப்படியே இந்த பாடசாலை

முழுவதும் ஒருக்கா சுத்திக் காட்டிவாரும்'' என்று சொன்னா. எனக்கோ உடுப்பு இல்லாம போற மாதிரி அவமானமா இருந்திச்சு. அதிபரும் கண்டுட்டு காணாதவர் போல இருந்திட்டார். ஏன் எண்டா சுந்தரி ரீச்சர் எண்டா அவருக்கும் பயம். அவாதான் அதிபரின் மனைவியும்கூட! அப்படியே பாடசாலை எல்லாம் சுத்திவர எனக்கு இனி ஏன் வாழ்வான் என்று கூட தோன்றிச்சு. அப்பிடியே வரேக்க சயன்ஸ் ரீச்சர் இதக் கண்டுட்டா. உடனே என்னை கூப்பிட்டு அந்த மட்டையை கழற்றி எறியவும், சயன்ஸ் ரீச்சர்க்கு ஆதரவான மூண்டு நாலு ஆசிரியர்கள் சேர்ந்து ''அவாவும் ஒரு ஆளா? ஒரு பிள்ளைய இப்படியா பண்ணுறது'' என்றெல்லாம் திட்டிச்சினம். பிறகு, குமரனைப் பார்த்து ''குமரன் வகுப்புல போய் சங்கரின்ர புத்தகபைய எடுத்து வந்து அவரை வீட்டுக்கு அனுப்பி விடும்'' என்று சொல்லிவிட்டு எனக்கு ஆறுதல் வார்த்தையும் கூறி அனுப்பி வைத்தார்.

வீட்டுக்கு போகும் போது என் மனதில் அந்த நினைவு மீண்டும் மீண்டும் வந்து கொண்டேயிருந்தது. நான் அந்தத் தவறை பசியினால்தானே செய்தேன்! என்ன பசியிருந்தாலும் நான் அப்படியான தவறை செய்திருக்கக் கூடாதோ? சரி இனி எல்லாம் நடந்து முடிந்துவிட்டது.... நான் ஏன் வாழ வேண்டும்? என்று மனது பலவாறு அலைபாய்ந்து கொண்டிருந்தது. அந்தக் கணம் மனக் கண்ணின் முன் எனக்காக வாழும் தாயும் தங்கையும் நினைவுக்கு வந்தார்கள். அவர்களுக்காகவாவது நான் வாழவேணும். ஆனால் நான் எப்பிடி திரும்பவும் பாடசாலைக்குப் போவன்? எப்பிடி கூடப் படிக்கிற பிள்ளை களின்ர முகத்தில முழிப்பன்? ஐயோ..... நான் இனி எப்பிடிப் படிப்பன்....!!!

— • —

**கடந்த இதழில் கேட்கப்பட்ட வினாக்களுக்கான விடைகள் 10**

1. ஹென்றி டுனாட்
2. கீதாஞ்சலி
3. சேர்பியா and மொன்டிநீக்ரோ
4. Subscriber Information Modulation
5. 25
6. அவுஸ்ரேலியன் ஓபன்
7. மலேசியாவின் கோலாலம்பூரில்
8. 1982 இல்
9. பிரதாப முதலியார் சரித்திரம்
10. தாயகம்

அதிக வினாக்களுக்கு விடைகளை எழுதி பரிசு பெறும் வாசகர்

பெ. நதியா,
128, வைரவப்புளியங்குளம்,
வவுனியா.

## வினாக்கள் — 10

1. யப்பானின் பங்குச் சந்தை என்ன பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
2. உலகின் உயரமான பீடபூமி எது?
3. பங்களாதேஷின் தலைநகரம் என்ன?
4. 'இளவரசன்' என்ற நூலின் ஆசிரியர் யார்?
5. அமெரிக்காவின் வெளியுறவுச் செயலாளர் யார்?
6. எஸ்.எம்.எஸ் என்பதன் விரிவாக்கம் யாது?
7. பேபி 81 குழந்தையின் பெயர் என்ன?
8. காசி திரைப்படம் சிங்களத்தில் எப்பெயரில் தயாரிக்கப்படுகிறது?
9. அடுத்த ஒலிம்பிக் போட்டி எங்கு நடைபெற உள்ளது?
10. அமெரிக்காவின் அரசியலமைப்பு எழுதப்பட்ட ஆண்டு?

மேற்தரப்பட்ட பத்து வினாக்களுக்கும் சரியான பதிலை எழுதி அனுப்பும் அதிஷ்டசாலி வாசகருக்கு நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

# இப்படியும்

கவிதை

எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள்
விடிவதாய் – எனக்கும்
இரவுகள் விடிகின்றன – ஆனால்
பகல்களை அடைந்த பாடில்லை

குறுகிய வாழ்க்கையால் சுருங்கிக் கொண்டது
மெட்டிச் சத்தம்

கணவன் கொடுத்ததல்ல – இந்த
பூவும் பொட்டும் – இருந்தும்
எடுத்துச் சென்றதென்னவோ
அவர்தான்!

உண்மைகள் – எப்போதும்
உலகுக்கு எதிரிதான்

இப்போதும்
அன்று போலவே – அதே
கனவுகளை விதைத்து
காத்திருக்கிறேன்.
ஓர் வாழ்வுக்காய்
யாருக்கும் சொல்லாமல்!!



- சி.ஷேர்மிளா -

# எதிரொலி



என் கற்பனைகளுக்கு பாத்தி கட்ட
என் ரசனையாய், தேடலாய், தேவையாய்
நீ இருப்பது புரியாது
கடல் தாண்டி, மலையேறி என் விம்பத்தை தேடினேன்
பருவங்கள் மாற பாதைகள் புரிந்தன....
பயணிக்கும் பாதையின் செப்பனிடுதல் சிக்கலானது -இருந்தும்
தெளிவும், திடமும் உன்னிடமிருப்பதாய் இன்றுணர்ந்தேன்...

அன்றும்,
காற்றிடம் பேசினேன்
கதை சொன்னேன், கவிதையும் சொன்னேன்
காற்று வாங்கியின் சேமிப்பாய் - அவை
உன்னிடம் வந்தடையுமெனப் புரியாது
அறுத்தெறிந்த தொப்புள் கொடியுடன்
அனல் கணன்ற வீதிகளில்
அனாதையாய் அகதியாய் புலம்பித் திரிந்தேன்


எனக்குள் இருந்த பனை மர உறுதி
எமைப்பிரித்த சமுத்திரத்தின் ஓரத்தில் நின்று
ஓங்கி ஒலிக்கும் பலத்தை தந்தது
காற்றின் அதிர்வலைகள் உனக்கான என் குரலை
அழைத்துச் செல்லும் என்று.....

~ இ. சுபாரா ~
(தமிழ் நாடு)

### சீனாவின் சின்னக் கதைகள் ~ 1

# வாத வியாதி

வை : வைத்தியர்
நோ : நோயாளி



**வை** : வாருங்கள் இருக்கையில் அமருங்கள்

**நோ** : ஏன் என்னுடைய நிற்கும் உரிமையை நீங்கள் எதிர்க்கிறீர்களா?

**வை** : (போத்தலில் இருந்த நீரை கோப்பையில் ஊற்றியபடி) கலவரப்படாதீர்கள். அமைதியாக இருங்கள், இந்தாருங்கள் கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள்.

**நோ** : இது மடத்தனமானது! நீங்கள் பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்க்கிறீர்கள். எல்லாத் தண்ணீரையும் அருந்த முடியாது. ஒரு வேளை நீங்கள் இதனுள் விஷத்தைக் கலந்திருந்தால், அப்படியாயின் தண்ணீர் அருந்தத் தக்கதல்ல.

**வை** : தண்ணீருக்குள் விஷம் கலக்கப்படவில்லை என்பதற்கான உறுதிமொழியை என்னால் தரமுடியும்.

**நோ** : நீங்கள் விஷமூட்டினீர்கள் என்று யார் சொன்னது? அப்படிச் செய்ததாக நான் உங்கள் மீது குற்றம் சாட்டினேனா? அவ்வாறு செய்ததற்காக நீதிபதி உங்களுக்கெதிராக தீர்ப்பு வழங்கினாரா? நான் சொல்லவில்லை. ஆனால் நான் சொன்னதாக நீர் சொல்கிறீர். இவ்வாறு சொல்வது விஷமூட்டுவதை விட விஷம் கூடிய செயலல்லவா?

**வை** : (பேச்சை மாற்ற விரும்பி) இன்று உண்மையில் நல்ல காலநிலை உள்ள நாள் இல்லையா?

**நோ** : முட்டாள்தனமான கதை இது? இங்கு நல்ல காலநிலையாக இருக்கலாம். ஆனால் உலகம் முழுவதும் அப்படியல்ல. உதாரணமாக வடதுருவத்தில் காலநிலை மிகக்கொடுமை. பயங்கரமாகக் காற்று வீசுகிறது. இருள் முடிவுறாது தொடர்கிறது. பனிக்கட்டிகள் ஒன்றையொன்று மோதுகின்றன.

**வை** : இது வடதுருவம் இல்லையே

**நோ** : ஆனால் வடதுருவத்தில் உள்ள காலநிலையை மறக்க முடியாது. மறுப்பீர்களாயின் பல உண்மைகளை மறைக்க முயற்சிக்கிறீர்கள் என்று அர்த்தம். எனவே நீங்கள் ஏதோ இரகசியத் திட்டங்களை வைத்திருக்கிறீர்கள்.



**வை** : இங்கிருந்து நீங்கள் வெளிக்கிடுவது நல்லது எனக் கருதுகிறேன்

**நோ** : என்னை வெளியேறச் சொல்வதற்கான அதிகாரம் உங்களிடம் இல்லை. இது வைத்தியசாலை காவல் நிலையம் அல்லவே. என்னை நீங்கள் கைது செய்யவோ தண்டனை வழங்கவோ முடியாது.


மூலம் : Wang Meng
தமிழில் : பகலவன்

# என்னதான் நடக்கும்

சுனாமி பேரலைகள் ஓய்ந்த பிறகும், இன்னும் பேச்சலைகள் ஓய்ந்தபாடேயில்லை. கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26ந் திகதி தென்கிழக்காசிய நாடுகள் மற்றும் கிழக்கு ஆபிரிக்க நாடுகளைத் தாக்கி சேதம் விளைவித்திருந்தது இந்த சுனாமி எனும் ஆழிப்பேரலை இந்தப் பேரலை இலங்கையின் கரையோரங் களையும் பெருஞ் சேதத்துக்கு உள்ளாக்கியது. அதனால் நாட்டின் வளங்கள் பெருமளவில் பாதிப் படைந்தன. அத்துடன் உயிரிழப்பு எண்ணிக்கையும் தேற்றுதலுக்கு உரியதாயில்லை.

இலங்கையில் ஏற்பட்டிருக்கக் கூடிய உடமையிழப்புக் களுக்கு ஈடாக வெளிநாடுகள் வழங்கியுள்ள உதவிகள், திட்டமிட்ட செயல் திட்டங்களின் வாயிலாக இன்னொரு புதிய இலங்கையை கட்டியெழுப்பு வதற்கு போதுமானது. ஆனால் இவ்வனர்த்தம் நிகழ்ந்து இரண்டு மாத காலங்கள் நிறைவுக்கு வருகின்ற போதும் கரையோர பிரதேசங்களில் மீள்கூட்டுமாணப் பணிகள் அரசாங்க திட்டங்களுடன் முழுமையாக முன்னெடுக்கப்படாமை வேதனைக் குரியதாக இருக்கிறது. நிவாரணப் பொருட்களை வழங்கும், மீள் கட்டுமாணப் பணிகளில் உதவிபுரியும் சந்தடி சாக்கில் வந்துவிட்டு சென்றிருக்கும் அல்லது செல்வதாக கூறிக்கொண்டு இலங்கையிலே தங்கியிருக்கும் வெளி நாட்டுப்

நாட்டு நடப்பு



படைகளின் திட்டமிடல்கள் தான் என்ன? அது மட்டுமில்லாது ஜனாதிபதி யாகவிருந்த போது இலங்கை பக்கமே திரும்பிப் பார்க்காத அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான பில்கிளின்ரன், ஜோர்ஜ் புஷ் ஆகியோர் இலங்கைக்கு வந்த சென்றுள்ளார்கள். தெற்காசிய நாடுகளான மீளக் கட்டியெழுப்புவது தொடர்பில் சர்வதேச ரீதியில் நிதி சேகரிக்கும் பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் W. புஷ் கூறியிருக்கின்றார். வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கியிருக்கக் கூடிய உதவிகள் ஒருவகையில் ஆறுதல் தரக்கூடிய விடயமாக இருந்தாலும், இன்னுமோர் விடயத்தை இத தருணத்தில் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. அதாவது வெளிநாடுகள் எமக்கு அளித்திருக்கக் கூடிய நிதியுதவிகளில் 100க்கு 75 வீதமானவை அவர்களிடமே பொருள் கொள்வனவுக்காக வழங்கப்பட வேண்டியது தான். அத்தோடு, 2005ம் ஆண்டு இலங்கை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டிய கடன் தொகைக்கான வட்டிப் பணத்தை

வழங்கத் தேவையில்லை என்று G 7 நாடுகள் அமைப்பு வட்டிப்பணத்தை ரத்து செய்துள்ளது. அப்படியானால் 2004, 2005ம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் கடன்களுக்காக ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாய் எவ்வாறு பயன்படுத்தப்படப் போகிறது. நாட்டின் சூழ்நிலைக்கு அமைவாக உரிய முறையில் பயன்படுத்தப்படுமா? பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்ட 6500 கோடி ரூபாய் எவ்வாறு செலவிடப்படப் போகிறது, ஈரான் சென்று வந்துள்ள இராணுவ அதிகாரிகள் ஆயுதக் கொள்வனவுக்கு பயன்படப் போகின்றதா? இப்படியாக இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி கட்டமைப்பில் முரண்பாடுகள் காணப்படும் சந்தர்ப்பத்தில் அரசியல் நகர்வுகள் மறுமுனையில் முரண்பாடுகளின் முழு உருவமாக மாறிக் கொண்டிருக்கிறது. இவ்வருடம் ஜனவரி 4ந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் அமுல்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் பத்து நாட்களில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படாமையால ஜனவரி மாதம் 18ம் திகதியோடு நிராகரிக்கப்பட்டது. பின்னர் பெப்ரவரி மாதம் மீண்டும் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த அவசரகாலச் சட்டத்தின் கீழ் படையினர்க்கு அதிகளவான பலம் வழங்கப் பட்டிருக்கிறது. இது ஜனநாயக நாடொன்றின் மனித மதிப புக்கள் மீது கேள்விகளை எழுப்பியுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட இன்றைய ஜனாதிபதியின் அண்மைக்கால நடவடிக்கைகளும் பங்காளிக் கட்சிக்கிடையிலான பிரச்சினைகள், பொதுக் கூட்டங்களில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் வெளியிடும் கருத்துக்கள் என்று குழப்பமான, சூழ்நிலையை உருவாக்கக் கூடியவையாகவே அமைந் திருக்கின்றன. இது இவ்வா றிருக்க எதிர்கட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது? எதிர்கட்சி தலைவர் வெளிநாடுகளுக்குச் சென்று இலங்கைக்கு உதவி வழங்கிய நாடுகளுக்கு நன்றி தெரிவித்து வந்துள்ளார். அது தவிர காலகாலமாக எதிர்க்கட்சிகள் செய்து வரும் பணியான ஆளும் கட்சியின் செயற்பாடுகளில் குறைகாணும் செயற்பாட்டினை எதிர்க்கட்சி நிறைவாக செய்து வருகிறது. இன்று நாட்டில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று வருடங்கள் நிறைவடைந்துள்ள வேளையில் அரச தரப்பில் இருந்து அரச சமாதான செயலகப்பணிப்பாளர் ஜயந்த தனபால ''இடைக்கால நிர்வாகசபை'' அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கும் என்று தெரிவித்துள்ளார். இதற்கு பதிலளித்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு அரசு முன்வைத துள்ள இடைக்கால நிர்வாக சபை அடிப்படையிலா? அல்லது விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை அடிப்படையிலா? பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்ற வினாவினை எழுப்பியுள்ளது.

இப்படியாக, நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் நகர்வுகளின் மத்தியில் மக்களின் நிலைதான் மிகவும் கவலைக்குரியதாக இருக்கிறது.

~ பொ. கோபிநாத் ~



# மகளிர்... மகளிர்...

ஏமை மங்கையாய்
படைத்த கடவுளுக்கு....
மகளாய் பெற்ற
தாய்க்கு --
நன்றிகள்,

பாசத்தின் வேராம்
தாய்மை எனும்
பதவியை பெறுபவர்।

பெண்மையின்
மென்மையால்
வன்மையைப்
போக்குபவள்।



வீதியோர
சண்டை முதல்
நாட்டின்
எல்லைப்புற
போர் வரை
வாழ்பவள்।

குலமகளாய்
குடியிருக்கும்
கூட்டின்
குலவிளக்காய்
சுடர் விடுபவள்।

மக்கள் சேவைக்காய்
சமூக சேவகியாய்
வாழ்ந்து மறைந்த
பெண்மையின் அன்னை
அன்னை தெரேசா ----

ஆணுக்கு பெண்
நிகர் --- என
விஞ்ஞானியாய்
விண்ணில் கரைந்த
நட்சத்திரம்
கல்பனா -----

இவர்கள் மட்டுமல்ல
சுட்டெரிக்கும்
சூரியனைச்
சுற்றிக் கொண்டிருக்கும்
பூமி கூட
தாய் தான்.

- ஆஷிகா -



# இளையதம்பி தயானந்தாவைச் சந்தித்தோம்....

**ஒரு ஊடகவியளாலராக பயணித்த பாதையிலிருந்து ஒலிபரப்பு துறை பற்றி உங்களுடைய கருத்து?**

உண்மையில் எனக்கு ஒலிபரப்பு என்றால் என்ன என்பது தெரியாது.

**தெரியாத ஒரு துறையில் நீங்கள் எவ்வாறு இவ்வளவு காலம் பணியாற்றுகின்றீர்கள்?**

அரசியல்வாதிகள் எப்படிச் செயல்படுகின்றார்களோ அதைப்போலத்தான்.

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இருந்து நீங்கள் வெளியேறியமைக்கு என்ன காரணம்?**

என் வளர்ச்சிக்கு போதுமான நல்ல பகைவன் இல்லை என்பதால் அங்கிருந்து வெளியேறியிருக்கிறேன்.

**அரசு சார்ந்த ஊடகம் தனியார் ஊடகம் இரண்டிலும் நீங்கள் காணக்கூடிய வேறுபாடுகள்?**

அரச ஊடகம் அரசின் ஊதுகுழல் என்றுதான் எல்லோரும் சொல்கிறார்கள். அது தவறு என்று கருதுகிறேன். எல்லாமே ஊதுகுழல்களாக இருக்கின்றன. யாருடைய ஊதுகுழல் என்பதை நீங்கள் மிக நுணுக்கமாக தேடினால் தெரிந்து கொள்வீர்கள். எல்லாமே ஒன்றுதான் என்று கருதுகிறேன். இரண்டும் அதனுடைய செயற்பாடுகளில் வேறுபட்டு இருக்கலாம்.

**அன்றைய அறிவிப்பாளர்களும் இன்றைய அறிவிப்பாளர்களும் எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றார்கள்?**

அதைத்தான் நான் தனியாருக்கும் அரச ஊடகத்துக்கும் காட்ட கூடியதும். அறிவிப்பாளர்கள் இப்போது இல்லை. முன்பு கிடைத்ததை வாய்விட்டு வாசிக்கக்கூடிய அறிவிப்பாளர்கள். இப்போது அதை தாண்டிய தொடர்புபடுத்துகின்ற ஒரு அறிவிப்பாளன். இதில்தான் அன்றும் இன்றும் வேறுபடுகிறது. இன்றைய அறிவிப்பாளர்கள் பல தேடல்களோடும் பல கேள்விகளோடும் வாழ வேண்டியவர்கள். வாழ்கிறார்களா? என்பது பற்றியெல்லாம் நான் சொல்ல முடியாது. ஆனால் அன்றிருந்தவனை விட இன்றிருப்பவன் மிக முக்கியமானவன்.



**இன்றைய ஊடகங்களில் "நடுவுநிலைமை" என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?**

கேட்கக் கூடாத கேள்வி. நடுவுநிலை என்பது எப்போதும் எதற்கும் கிடையாது. அரச சார்பு, மறுதரப்பு சார்பு எப்படிப் பார்த்தாலும் எல்லா ஊடகங்களும் ஏதோ ஒரு பக்கம் சார்ந்தே இருக்கும். பக்கஞ் சாராத நடுவு நிலையான எந்தவொரு ஊடகமும் இருப்பிற்கான வாய்ப்பை இழந்துவிடுகிறது.

**முரண்படு தேசத்தில் ஊடகங்களின் பங்களிப்பு எவ்வகையில் அமைந்து இருக்கிறது?**

தேசத்தை முரண்பட வைத்ததே ஊடகங்கள்தான் என்று நான் சந்தேகிக்கிறேன்.

**இலங்கையில் பத்திரிக்கைகள் பற்றி உங்களுடைய கருத்து?**

இலங்கையில் நான் அந்த துறை சார்ந்து கருத்து தெரிவிக்கும் அளவிற்கு இருக்கின்றேனா இல்லையா என்பது தெரியாது. ஆனால் என்னுடைய அறிவின் எல்லையில் தேசிய பத்திரிகை என்ற ஒன்று இலங்கையில் கிடையாது. ஒரு பத்திரிகையை ஒருவன் வாங்குகிறான் என்று சொன்னால் அவன் யார்? என்று என்னால் சொல்ல முடியும். வீரகேசரி வாங்கினால் அவன் யார்? தினக்குரல் வாங்கினால் அவன் எந்த பிரதேசத்தவன்? சுடர் ஒளி வாங்கினால் அவன் எது சார்ந்தவன்? தினகரன் வாங்கினால் அவன் எந்த இனம்? என்று சொல்லக்கூடிய அளவிற்கு பத்திரிகைகள் சிதறிக் கிடக்கின்றன.

**அச்சூடகங்கள் இனவாதத்தை கக்குகின்றதா?**

சிங்கள ஊடகங்கள் மட்டுமல்ல, தமிழ் ஊடகங்களும் அதைத்தான் செய்கின்றன. இரண்டும் தாம் யாரிடம் போகின்றோமோ அந்தந்த இனத்தினுடைய பெருமைபேசி, அதன் வழியாக இனவாதத்தை தூண்டி, அதன் ஊடாக இன்றைய பேரை வலுப்படுத்தியிருக்கின்றன என்று கருதுகிறேன். இன்றிருக்கும் போர் அல்லது இன்றுவரை வளர்ந்துவிட்ட போர். தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையிலான போர். மாறுபடும் மொழிகொண்ட ஊடகங்களுக்கு இடையேயான போர்.

**அரசியலும் ஊடகமும் எவ்வாறு ஒன்றிணைந்திருக்கின்றன அல்லது வேறுபட்டிருக்கின்றன?**

ஊடகம் என்பது அரசியல் இல்லாத ஒன்றாக எப்போதும் இருக்கமாட்டாது. முன்பெல்லாம் ஊடகத்தில் அரசியல் கலந்துவிடும். இப்போது அரசியலில் அவ்வப்போது ஊடகம் கலக்கிறது என்று சொல்லலாம்.

**இன்றைய அரசியல் சூழ்நிலையில் அதிகரித்து வரும் அந்நியத் தலையீடுகள் பற்றி உங்கள் கருத்து?**

இன்று அல்ல என்றுமே அப்படித்தான் இருந்தது. இன்று வெளிப்படையாக தெரிகிறது. எமதுபோர் அல்லது எமது சச்சரவு உலகைத் தொடுகிறது. அந்த வகையில் இந்துமாசமுத்திரத்தை கட்டுப்படுத்த அல்லது பிராந்தியத்தை தன்வசம் வைத்துக் கொள்ள விரும்புகிற எந்த வல்லாதிக்கமும் இலங்கையை விட்டுகொடுக்கத் தயாராக இல்லை. அதற்கு அவர்கள் என்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் செய்கிறார்கள். அவை எங்களுக்கானவை அல்ல.

**விஸ்வரூபம் எடுத்து வரும் அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?**

அமெரிக்காவை விஸ்வரூபம் எடுக்கவைப்பதே எங்களைப் போன்ற அடியார்கள்தான். நாங்கள் அடிமைகள் அல்ல என்று சொல்வதற்காக உலக வங்கியோடு முட்டிப் பார்க்கிறார்கள். இவர்களால் முடியாது. காரணம் உலக வங்கி வேறாகவும் இந்நாடு வேறாகவும் இருந்து கனநாளாகிவிட்டது. நவகாலனித்துவத்தை அறிய விரும்பும் எவரும் பார்க்க வேண்டிய தேசம் இலங்கை.



**அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

"தொண்டர் தம் பெருமை சொல்வதும் அரிதே" என்று ஒளவை சொல்வாள். அதற்குமேல் நான் என்ன சொல்வது.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு தேடலில் நாம் ஒன்றுபட்டிருக்கிறோமா?**

ஒன்றுபட வேண்டும் என்பதை முழுமையாக புரிந்து கொண்டிருக்கிறோம். எமக்குள்ள தேவைகள் போலவே வேறு சமூகங்களுக்கும் அது இருக்கின்றது என்பது இப்போது அறியப்படுகிறது. அறிதல்கள் செப்பமான புரிதலாய் மாறும்போது போராட்டம் வெல்லும்.

**ஈழத்தில் இலக்கிய நிகழ்வுகளின் போக்கு எவ்வாறிருக்கிறது.**

ஒரு வாசகனாக ஈழத்தின் கவிதை படைப்பு, தமிழின் கவிதைப் படைப்பின் உச்சத்தில் நிற்பதாகவே படுகிறது. இரண்டாவது இலங்கையில் படைத்தே ஆகவேண்டிய, படைத்திருக்கக்கூடிய கதைப்புலம் மிக்க ஒரு மண்ணில், பெருவெற்றியை, விருதுகளை எட்டக்கூடிய ஒரு நாவலை படைத்தாக வேண்டும். படைக்கப்படவில்லை. பயம் காரணமாக இருக்கலாம்.

**இலங்கையில் சிறு சஞ்சிகைகள் ஏன் தோற்றுப் போகின்றன?**

என்னைப் போன்றவர்களை பேட்டி காண்பதால் முதலில் தோற்றுவிடுகின்றன. (சிரிக்கிறார்.....) இரண்டாவது சிறு சஞ்சிகை என்பது தேடுதலுக்குரிய ஒரு சமூகத்தின் அல்லது எழுத்து படைப்பாளர்களின் முயற்சி. ஜனரஞ்சகத்தன்மை அதில் சிறிதளவுதான் கலந்திருக்கும். வாசகனைப் பொறுத்தவரையில் அவன் வாசிக்கவே சஞ்சிகைகளை வாங்குகிறான். சிறு சஞ்சிகைகள் வாசிப்பதற்கானவை அல்ல. அவை படிப்பதற்கானவை என்பதால் வாசகர்கள் அதை வாங்குவதில்லையோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது.

**படைப்பளிகளைப் பொறுத்தவரையில் சொல்லுக்கும் செயலுக்கும் இடையில் சம்பந்தம் இருக்க வேண்டும் என்பது தொடர்பில் உங்களுடைய அபிப்பிராயம்?**

பாரதியைச் சொல்லலாம். அதற்குப் பிறகு வேண்டுமென்றால் கண்ணதாசனைச் சொல்லலாம். அவர் சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு வைத்திருந்தாலும் தான் செய்ததைச் சொன்னார் என்பது. மற்றையது அரசியல்வாதி முதல் படைப்பாளி வரை சொல்வதை செய்யமுடியாது. அல்லது செய்யக் கூடியதை அவர்கள் சொல்வதும் இல்லை.

**ஒரு எழுத்தாளர் எதற்காக எழுத வேண்டும்?**

தனக்காக எழுத வேண்டும். என் எழுத்தை படித்து சமூகம் திருந்தட்டும் என்று நினைத்தபடி யார் எழுதுகிறானோ? அவன் பின்னாளில் எழுத்தாளன் இல்லாமல் ஆகிவிடுகிறான்.

**கலை கலைக்காகவா? அல்லது மக்களுக்காகவா?**

பொதுவாக தனக்காக என்றுதான் இப்போது எல்லோரும் நினைக்கிறார்கள். இது ஒரு பழைய பிரச்சனை, கலை கலைக்காகவா அல்லது மக்களுக்காகவா என்பது அண்மையில் மறைந்து போன நாடகத்துறை சார்ந்த அறிஞர்

நா.சுந்தரலிங்கம் அவர்கள் சொன்ன வார்த்தைகள் "நாடகம் நாடகத்துக்கானது. வேறுபலர் நாடகத்தை வெவ்வேறு காரணத்திற்கான ஊடகமாகப் பாவிக்கின்றார்கள். அது உரியதல்ல. நாடகம் என்பது நாடகமாகவே இருக்கவேண்டும். அதை வேறு செய்திகள் தருவதற்கான ஊடகமாகப் பயன்படுத்துவது அர்த்தமற்றது". அதை நாம் மீண்டும் சொல்லலாம்.

**வரிகளை கவிதைகளாக சொல்வதில் வல்லவர் என்று உங்களைப் பற்றி ஒருவர் குறிப்பிட்டிருந்தார் இது பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?**

நான் கவிதை செய்யும் ஆற்றல் அற்றவன் என்பதை பல சமயங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். நான் கவிஞனும் அல்ல. ஒரு அன்பிற்காக கவிஞன் என்று கூப்பிடுகின்றார்கள். ஒரே ஒரு விடயம் மட்டும் சொல்லலாம். எனக்கு மரபு, கவிதை இதுவெல்லாம் தெரியாது. ஆயினும் எது கவிதை என்று தெரியும். கவிதை என்பது வசனத்தை அண்மித்த ஒன்றுதான். அப்படித்தான் இப்பொழுது இருக்கின்றது. நான் வசனத்தை கவிதையாக்குவதும் இல்லை. வசனத்தை கவிதையாக்கும் ஆற்றல் மிக்கவர்கள் இருக்கிறார்கள். நான் வசனங்களையே வாய்ப்புக்கிடைத்தால் கூட்டிக்குறைத்து கவிதை மாதிரி சொல்லிவிடுகிறேன். கவிதை சொல்வது கிடையாது. ஆனால் இன்றைய கவிதை வசனத்திற்கு அருகில்தான் இருக்க முடியும் என்று க.நா.சு. சொல்கிறார்.

**உங்களின் "வானலையின் வரிகள்" என்ற நூலில் தமிழகத்தை சார்ந்தவர்களை மட்டுமே நேர்கண்டமை பற்றி எழுந்த கண்டனம் பற்றிய உங்கள் பதில் என்னவாயிருக்கிறது?**


நான் நூல் எழுதியமை பற்றியே என் மனைவி கண்டிக்கிறாள். அது ஏதோர் காரணம் கருதி பிரிக்கவில்லை. தமிழினி 2000 மாநாட்டில் நான் சந்தித்த தமிழக படைப்பாளிகளை இணைத்த ஒரு நூல். அதில் வானொலிக்காக நான் எடுத்த பேட்டிகளும் அடங்குகின்றன. ஒரு வகையில் அவை இணைய வேண்டும் என்பதற்காகவே தமிழக படைப்பாளிகளை இணைத்துக் கொண்டேன். ஈழத்து படைப்பாளிகளை இணைத்து நூல் படைக்கலாம். பிரச்சினை இல்லை. ஆனால் எனக்கு எழுதும் பழக்கம் கிடையாது. ஒலி ஊடகத்தினூடாக நான் செய்தவை எழுத்து ஊடகத்தினூடாக வானலையின் வரிகளில் வந்தன. அவ்வாறு இனி மேலும் வரக்கூடும்.

**உங்களின் இலட்சியம் என்ன?**

**நேர்காணல்: ந. பிரசாந்த்**

இருப்பு.

# மரபின் தொடர்ச்சி



இப்பொழுதும்
கண்ணகி பற்றியும்
மாதவி பற்றியும்
சீதை பற்றியும்
பேசப்படுகின்றது
நிகழ்நிலைகளில் சிறுசிறுமாற்றம்

கணவனை விட்டுப்பிரிந்து வேறிடம் நாடி
நீதி தேடிக் கொள்ளும் கண்ணகிகள்

கணவருக்கு இரண்டாமவராய் இருக்கவிரும்பாது
நாடு மீளும் மாதவிகள்

''கணவன் அழைப்பான்'' நம்பிக்கையோடு பல்லாண்டு
பொறுமை காக்கும் சீதைகள்

இப்பொழுதும்
கண்ணகி பற்றியும்
மாதவி பற்றியும்
சீதை பற்றியும்
பேசப்படுகின்றது.

\- *மீநிலா* -

கவிதை

## அட்டைப்படக் கவிதை



குளிரும் நிலவு வளரும் பொழுதின்
இருளின் ஒளியில் கதைகள் பேசும்

உயரும் மரமும் விடியும் பொழுதும்
விரியும் கிளையும் அசையும் முகிலும்
இணையும் இசையும்
இயங்கும் இயம்பும்

உணரும் வகையின்
உயர்வைத் தேடி
புரியும், விரியும்
நாடிச் செல்லும்

\- வானதி -

# வெ(நெ)றி.......

காலைப்பொழுதுகள் கருக்கலை
நீக்கி விடியும்
குடிகாரன் வீடுகளில்
கருக்கலாகவே முடியும்
சோலைப் பூப்போல் வாழ்வுதனில்
சோகக் கள் வழியும்
வேலையுதன் கூலி கூட
வெறி போட முடியும்....



வீட்டில் பிள்ளைகள் வயிறு
பட்டினியில் நெரியும்
வீதியெலாம் அவன் கோலம்
அவமானக் கவி எழுதும்
பிள்ளைகள் மனது
வார்த்தை வதை கண்டு ஒதுங்கும்
வாழ்க்கைத் துணை கூட
உதை வாங்கிச் சரியும் .....

கேலிக்கூத்து நடக்கும்
கொட்டகை வீடாகும்.
அலறும் அடிதடியும்
அங்கெல்லாம் கூடும்.
நாற்ற வார்த்தை சத்தியாக
வாயிலிருந்து பொழியும்
அன்பூற்று இல்லாது
குடும்ப நிலை குலையும்.....

மனித வாழ்வைக் குலைப்பது மது
மாண்பைத் துடைக்குமதைப் பு துவிடு
மனிதத் தன்மையை அழிப்பது றி
அது கண்டே அதைத் தூ றி.....

கள்ளாமை பாவமென தினம்படி
உ க்காகவே தினமும் எழுதுகிறா ள் பலகவி
வெறி கொண்டு வீழ்ந்தவர்
பல ன்டு எண்ணியே நீ விழி.....



அன்பு பாசம் தரும் வெறி
வாழ்வினில் ஏற்றும் புதுத்திரி
மது ண்டானால் வரும் வெறி
அழிவுப் பாதைக்கே வழி.....

மதுகண்டு நீயும் விலகு
அன்பு வெறி கொண்டு பழகு
அறியாமை மனது விட்டு விலகும்
பொழுதுகள் இனிதாகப் புலரும்
வெறியை வீதியில் விட்டெறி
நெறி ஒன்றே நயமென்றறி .................!!!

... மீரா ...
(ஜேர்மனி)



# கருத்துமேடை — 06

* சீதன முறையானது ஆண்களையும் அவமதிக்கின்றது. ஏனெனில் சீதன முறைமையினால் ஆண் விலைக்கு விற்கப்படுகிறான். இதனால் இவர் ஒரு நுகர்வுப் பொருட்கள் தர்க்கத்தின் அடிப்படையில் வாங்கப்பட்ட பொருளை வாங்கியவர் எதுவும் செய்யலாம். எனவே அவை விலைக்கு வாங்கப்பட்ட ஆண்களை எதுவும் செய்ய முடியும்.

*(- தி. குமரன், கண்டி -)*

* பெண் சீதனம் கொடுக்கும் போது ஒரு ஆணினுடைய உழைப்பின் வேகமும், நம்பிக்கையும் சடுதியாகக் குறைகின்றது. ஆண்கள் சமுதாயத்தில் தரக்குறைவாக பார்க்கப்படுகின்றார்கள் கோழையான ஆண் என்று மறைமுகமாக கூறுகின்றார்கள்.

*(- A. ரவிக்குமார், முல்லைத்தீவு -)*

* சீதனம் என்பது ஒரு ஆணை பெண்வீட்டால், அவனை விலை கொடுத்து வாங்குவது போல் ஒரு சம்பவமாகும். இது அந்த ஆணை ''உன் மதிப்பு (பெறுமதி) இவ்வளவு தான்'' என்று செய்கையால் காட்டும் ஒரு சம்பவம். மனைவியிடம் வேலைகளையும் வாங்கி அவளிடம் இருந்து பணமும் பெறுகிறான். அவள் செய்த வேலைகள் அனைத்தும் கணவனுடையது. வேலையும் வாங்கி பணமும் வாங்குவது அவனுக்கு பெருத்த அவமானத்தை அளிக்கிறது.

*(- Y. பிரசாந்தி, நாவலப்பிட்டி -)*

* சீதனமே வேண்டாம் என்பது கல்யாணம் முடித்து பிச்சை எடுப்பதுதான் அவமானம், மாறாக சீதனம் வாங்கி ராணிபோல அவளை சமுதாயத்தில் வாழவைக்கிறான் எனவே அது நியாயமானது.

*(S. ஸ்ரீ நாகவாணி ராஜா, தலவாக்கல -)*

* பெண்களிடம் ஆண்கள் சீதனம் கேட்கும் போது ஆணுக்கு சமூகத்தில் மதிப்பும் புகழும் குறைகின்றது.

*(-N. பிறேமாவதி, தலவாக்கல -)*

* எமது அயலவர்களைக் கூடப் பார்த்தீர்களானால் கதைத்துக் கொள்வார்கள் பக்கத்து வீட்டு மருமகள் நிறைய சீதனத்துடன் தான் வந்திருக்கிறாள். அவளின் கணவன் இவ்வளவு சீதனம் வாங்கி எடுத்திருக்கின்றாள் என்று கூறி அவனை ஒரு இழக்கமான ஏளனமான முறையில் தான் அக்கணவனை அடையாளப் படுத்துவார்கள். அவ்விடத்திலும் அவ் ஆணுக்கு அவமானம் ஏற்படுகிறது.

*(- K. கமலேஸ்வரி, காரைநகர், யாழ்ப்பாணம் -)*

* ஆண்கள் சீதனப்பணத்தினை எதிர்பார்த்தது போல் தங்கி வாழ்வதில் சமூகத்தினிடையே உள்ள நன்மதிப்பு குறைவுறுகிறது. பணவிடயத்தின் போது அதாவது மனைவியின் பிறந்த வீட்டிலிருந்து மாமலர் மன உளைச்சல்களையும் மனத் தாங்கல்களையும் பொறுப்புணர்வுகளையும் பிரதிநிதித்துவம் செய்தாகி அவர்களின் போக்கு அமையும்.

*(- தி. சிவவண்ணன், வட்டுக்கோட்டை -)*

* உழைக்க வேண்டிய வர்க்கத்தில் பிறந்தவர்கள் கை நீட்டி கடன் வாங்குவது போன்றது சீதனம் வாங்குவது. முடவனாக இருந்து சீதனம் வாங்கினால் பரவாயில்லை, நல்ல ஆரோக்கியமாக இருந்துகொண்டு சீதனம் வாங்கும் போது மனைவியே கணவனை அவமதிக்கும் நிலை ஏற்படும்.

*(- மு. சசிப்பிரியா, நாவலப்பிட்டி -)*

* ஒரு ஆண் நிச்சயமாக சீதனம் பெற்றுக் கொள்வதால் சமூகத்தில் தான் முன்னர் இருந்த அங்கீகாரத்திலிருந்து குறைந்து மதிப்பிடப் பட்டுக் கொள்கிறான். உண்மையாகவே தனக்கு எதிர்காலத்தில் மனைவியாகப் போகிற எந்த ஒரு பெண்ணையும் தன் உழைப்பின் மூலம் கண்கலங்காது பார்த்துக் கொள்ளும் ஒரு பாக்கியத்தை குறித்த ஆண் சீதனம் வாங்கிக் கொள்ளும் முறையினால் இழந்து விடுவதனால் சமூகத்தில் அவனது ஆண்மையின் சிறப்பை இழக்க வைக்கின்றது.

*(- மாலினி சந்திரன், யாழ்ப்பாணம் -)*


## கருத்துமேடை. – 07

***இன்றைய காலகட்டத்தில் தாய்மொழியிலான கல்வியின் அவசியம்.***

கருத்து மேடைக்கான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. கருத்துகளைத் தவறாமல் எழுதி அனுப்புங்கள்.



# வாசகர் மேடை



பயில் நிலப் பூவே,

மாதமொருமுறை மலர்ந்து தென்றலாய் மாறி எம் அனைவரின் உள்ளத்தையும் எண்ணத்தையும் வருடிக் கொண்டு செல்கிறாய். உன்னில் பல ஆக்கங்கள் பாராட்டத்தக்கவை மேலும் நீ பசுமை நிறைந்த பசுஞ்சோலையாக மாணவர்களுக்கான வித்தகங்களை விசித்திரமாய் இட்டு வண்ணங்களை வானவில்லாய் வழங்கி பக்கங்களை பல எண்ணிக்கையில் விரித்து எம் கரங்களில் பவனிவந்து வாசகர்களுக்கு எனும் நம்பிக்கையோடு பயில் நிலப்பணி பல்லாண்டு காலம் வாழ வாழ்த்திவிடை பெறுகிறேன்.

*மு. லலிதா - க.தெ. வைத்தலாவ த.வி, மெதமாநுவர -*

நான்கு வர்ணங்களில் அட்டைப்படங்கள் பிரமாதமாக வருகின்றன. ஜனவரி மாத இதழில் சுனாமி பற்றி எழுதப்பட்ட கட்டுரையில் இலங்கையில் சுனாமி தாக்கிய நேரம் பிழையாக குறிப்பிடப்பட்டிருந்தது. புள்ளிவிபரவியல் ரீதியான தரவுகளை தரும்பொழுது, மிகவும் அவதானத்துடன் வெளியிட வேண்டும். ஆசிரியர் குழு இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

*தி. உமாகாந்தன், வவுனியா -*

பயில் நிலம் இதழின் அரையாண்டுச் சிறப்பிதழ் அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆக்கங்களும் தரமானதாகவும் நிறைவானதாகவும் அமைந்திருந்தது. உங்கள் முயற்சி தடைப்படாது செல்ல வேண்டும் என வாழ்த்துகிறேன்.

*சி. கஜேனசன், வத்தளை -*

இதழுக்கு இதழ் மாற்றங்களை வேண்டி பயணப்பட்டுக் கொண்டிருக்கிறது பயில்நிலம், அதுபோலவே சிறுகதைகளுக்கு போதிய பக்கங்கள் ஒதுக்கப்பட வில்லையோ என சிந்திக்கத் தோன்றுகிறது. எனவே ஒரு இதழில் குறைந்தது இரண்டு சிறுகதைகளாவது இடமபிடித்தால் இதழ் இன்னும் சிறப்பாக இருக்கும்.

*வை. கார்த்திகா, யாழ்ப்பாணம் -*



கவிதை

# தொட்டாற் சுருங்கியாய்.....


என்னுள்ளே சிறைவைக்கப்பட்டு
சுயநினைவற்று மயங்கி இருக்கும் மனிதம்.
சிலவேளைகளில் தன்னுள் நினைவுதிரும்பி
விழித்துப் பார்க்கும்!

என்னுள் மயங்கிய மனிதம் விடுதலைபெற்று
விழித்துப் பார்த்ததும் - என்னை,
நியாயவாதியாய், அன்புடையவளாய்
என் வாழ்க்கைப் பாதையில் வழிநடத்திச் செல்லும்!
அந்தப் பொழுதுகளில் என் உயிருக்கு
பாதுகாப்பு அவசியமாகிவிடுகின்றது!
என் உயிர்மேல் கொண்ட அக்கறையால்
என் அன்புக்குரிய மனிதத்திற்கு விலங்கிட்டு,
மனமெனும் மாளிகையில் சிறையிட்டுவிடுவேன்!
மனிதம் என்றும் என் மனமாளிகையில்
சிறையிருக்கிறது மௌனமாய்!
சிலவேளைகளில் விழித்தும், தடையுத்தரவின் போது
கண்களை மூடியும் என் சொல்லுக்குக்
கட்டுப்பட்டு தொட்டாற்சுருங்கியாய்
சுருங்கி விரிகின்றது என் மனிதம்!

~ கு. பாரதி ~

*With Best Compliments from*

# EXPO




- PLASTIC MONO / MULTI LAYER EXTRUDER
- ROTO / FLEXO PRINTING MACHINES
- SIDE / BOTTOM SEALING WITH SENSOR
- DOUBLE DECKER SEALING CUTTING WITH CONVEYOR
- RE-GRANULATION EXTRUNDER / GRINDER
- (HIP) DISPOSABLE CUP & PLATE MAKING PLANT
- LD FOAM FILM EXTRUDER
- PP CORD / BOX STRAPPING EXTRUDER
- DRINKING STRAW / LOLLY POP STICK EXTRUDER
- PVC BLOWN FILM / RIGID FLEXIBLE PIPE EXTRUDER
- PP / HDPE WOVEN BAG PLANT FLAT / CIRCULAR LOOM
- CORONA TREATER / STATIC DICHARGE ELIMINATOR

*Manufacturers Dealars of Plastic and Machinery*

**Faroni Enterprises**

**10, Anderson Street, Chennai - 600 001. India**
**Tel: 25389413, Tele Fax: 00-91-44-25368289,**
**E-mail: faroni@hotmail.com, faro_ni@yahoo.com**

# உங்களோடு சில நிமிடங்கள்....

அன்புள்ள நண்பர்களே!

பயில் நிலத்தின் ஆறு இதழ்களை வாசித்து, ஏழாவது இதழை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய ஆதரவுக்கும், வரவேற்புக்கும் மத்தியில் எம்முடைய ஆறாவது இதழை அரையாண்டுச் சிறப்பிதழாக, பக்கங்களை அதிகரித்து வெளியிட்டிருந்தோம்.

ஆறாவது பயில்நிலத்தின் வெளியீடு 06-02-2005 அன்று காலை 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஊடகவியலாளர் பார்வையினை திருமதி. கமலினி செல்வராஜனும், மூத்தோர் பார்வையினை பேராசிரியர் சி. சிவசேகரமும் நிகழ்த்தினர். அத்துடன் 4வது, 5வது, இதழ்கள் பற்றிய அறிமுகத்தை திரு. கு. ஸ்ரீராகவராஜன் நிகழ்த்தினார். இவ்வைபவத்தில் பயில்நிலம் குழுவினரின் **கழுத்தில் இறங்கியதோர் காவடி** என்ற கவியரங்கம் கவிஞர் மாவை வரோதயன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது. தே. ஜனமகன், நா. நிருத்திகா, செ.கௌரி ஆகியோர் நிகழ்வின் இடையிடையே பாரதியார் பாடல்கள், கவிஞர் சடகோபனின் வரிகளுக்கு M. மகிந்தகுமார் இசையமைத்த பாடல்கள் ஆகியவற்றை பாடினர். தொடர்ந்து புத்தகப் பண்பாட்டுப் புரவலர்கள் சிறப்பு பிரதிகளை பெற்று சிறப்பித்தார்கள்.

மாற்றங்களை வேண்டி பயணப்பட்டுக் கொண்டிருக்கும் நாங்கள், புதிய பகுதிகளை இதழில் அறிமுகப்படுத்த எண்ணியிருக்கிறோம். ஏழாவது இதழில் ''சீனாவின் சின்னக் கதைகள்'' என்ற மொழிப்பெயர்ப்புக் கதைகள் பகுதியை சேர்த்திருக்கிறோம். இது தொடராக ஒவ்வொரு இதழிலும் வெளிவரஇருக்கிறது. மாதாமாதம் நீங்கள் தரும் ஆதரவுக்கு எமது நன்றிகள். அதுபோலவே உங்கள் நண்பர்கள், உறவினர்களுக்கு பயில்நிலம் பற்றி கூறி அவர்களையும் பயில்நிலம் வாசகர் ஆக்குங்கள். நீங்கள் சந்தாதாரர் ஆகுவதன் மூலம், கால தாமதம் இன்றி உங்கள் இல்லம் தேடி பயில் நிலம் இதழ் கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

உங்களிடமிருந்து எமக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் ஆக்கங்களுக்கு மிக்க நன்றிகள். நிறையபேர் முதல் ஆக்கமுயற்சிகளை எமக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள். அவர்களது ஆக்கங்கள் எமது ஆலோசனை குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு இதழில் இடம்பிடிக்கிறது. ஏனையவர்கள் எழுத்து முயற்சியை இடைநிறுத்தாமல் தொடர்ந்து எழுதுங்கள்.

தினம் சமூகத்தை படியுங்கள், அதிலிருந்து ஆழமாக சிந்தியுங்கள். எளிமையான நடையில் எழுதுங்கள். வெகு சீக்கிரத்தில் உங்கள் ஊர்களிற்கு பயில் நிலம் குழு வரவிருக்கிறது. வாருங்கள் ஒன்றாய்க் கூடி ஆரோக்கியமான தோர் எதிர்காலம் அமைப்போம்.



# அப்படியே இரு!

அப்படியே இரு
அசையாமல்
மெல்ல சிரித்தபடி
கமராவை நோக்கி
கண்களை திருப்பு!

அப்படியே இரு
உடலைச் சுற்றி இருக்கும்
மினுமினுக்கும்பட்டு
மடிப்புக் குலையாது
இருக்க
கமராக் கண்களுக்கு
காட்சி கொடு!

அப்படியே இரு
வேடம் புனையும்
நாடக நடிகர்
அப்பும் பூச்சு அப்பி
கமராக் கண்களுக்கு
கலராய் இரு!

அப்படியே இரு!
அங்கம் எங்கும்
தங்கம் மின்ன
தலையில் இருந்து
பாதம் வரையில்
முன்பின் பக்கத்
தோற்றம் அத்தனையும்
கச்சிதமாய் இருக்க
கமரா கண்களுக்கு
காட்சி கொடு!

நீ சமைந்து விட்டாய்
ஆகையால் அப்படியே
பதுமை என இரு!
உன்சுயத்தை இழந்து
அப்படியே இரு!

- அழ பகீரதன் -

இம் மாத இதழ் 59/3, வைத்தியா வீதி, தெகிவளை மயில்நிலம் ஜுழலிவராஸ், விகடன் பிறிண்டர்சில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.